Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 274

சனிக்கிழமை
27 ஒகஸ்ட் 2022

ஆவணி 11 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 12
விலை : ரூ. 50

முச்சந்தி முரளி



"இப்பிடியே எல்லாரும் மாறி மாறி ஒவ்வொருத்தரைக் குற்றம் சாட்டுகினமே தவிர உருப்படியா ஒண்டும் செய்யினமில்லைப் பாருங்கோ"

## சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சு தொடர்ந்தும் இழுபறியில்!

### புதன்கிழமை மீண்டும் பேச முடிவு



கொழும்பு. ஓக. 27
இலங்கையில் தற்போது நிலவும் நிதி நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கும் இடையில் இரண்டாம் சுற்றுப் பேச்சு நேற்றுப் பிற்பகல் நடைபெற்றது. இதன்போதும் இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. மீண்டும் எதிர்வரும் புதன்கிழமை பேச்சு நடத்த இணக்கம் காணப்பட்டுள்ளது. 11

# இலங்கையின் விவகாரத்தில் மீண்டும் நுழையும் ஜப்பான்

### கடன் வழங்கியோருடன் மாநாடு நடத்துவதற்கும் திட்டம்

கொழும்பு, ஒகஸ்ட் 27
கடன் நெருக்கடியில் இருந்து இலங்கையை விடுவிக்கும் நோக்கில், கடன் வழங்கிய தரப்பினருடன் கலந்துரையாடலை ஏற்பாடு செய்வதற்கு ஜப்பான் அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக ரொய்ட்டர்ஸ் செய்திச்சேவை நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது. 11



## ஒரு கோடி ரூபா பெறுமதியான வாடிகளும், வலைகளும் நாசம்

### திடீர் தீயினால் ஏற்பட்ட விளைவு

யாழ்ப்பாணம், ஓக. 27
வடமராட்சி கிழக்கு- கட்டைக் காட்டுப் பகுதியில் நேற்றுமுன்னிரவுமூன்று வாடிகள் தீயில் எரிந்து சாம்பராகியுள்ளன. வாடிகள் தீயில் எரிவதை அவதானித்த 11

## மோ.சைக்கிளிலிருந்து வீழ்ந்து 4 மாத கர்ப்பிணிப்பெண் சாவு!

### மருத்துவச் சிகிச்சைக்கு சென்றபோது சோகம்



யாழ்ப்பாணம், ஓக. 27
மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த கர்ப்பிணிப்பெண் ஒருவர் விழுந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். இந்தச் சோகச் சம்பவம் காரைநகர் 11

## கோத்தாவை பாதுகாக்கவே போராட்டக்காரர்கள் கைது

### பொன்சேகா குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 27
கோத்தாபயவுக்கு இலங்கையில் அடைக்கலம் கொடுத்து அவரைப் பாதுகாக்கவே போராட்டச்செயற்பாட்டாளர்களை ஜனாதிபதி ரணில் கைது செய்து அடக்கி 11

## இலங்கையின் இறைமையை மீறுகின்றதாம் இந்தியா

### கொழும்புக்கான சீனத் தூதுவர் மறைமுகமாகக் குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 27
சில நாடுகள் அருகில் அல்லது தொலைவில் இருக்கலாம். பல்வேறு அடிப்படையற்ற காரணங்களை முன்வைத்து இலங்கையின் இறையாண்மை மற்றும் சுதந்திரத்தை மிதித்து, அசௌகரியங்களுக்கு அவை உள்ளாக்கி வருகின்றன என்று சீனத் தூதுவர் ஸி ஸென்ஹொங் கூறியுள்ளார். 11

## ரஞ்சனுக்கு முழுமையான விடுதலையை வழங்குக

### ஜனாதிபதியிடம் சஜித் கோரிக்கை

கொழும்பு, ஓக. 27
ரஞ்சன் ராமநாயக்கவைத் தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் கொண்டு வருவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயார். கிடைக்கும் முதல் வாய்ப்பிலேயே 11



## ரஞ்சன் ராமநாயக்கவுக்கு 'வாய்ப்பூட்டுடன்' பொதுமன்னிப்பு!

### நேற்று சிறையில் இருந்து விடுவிப்பு

கொழும்பு, ஓக. 27
வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க, ஜனாதிபதியின் பொது மன்னிப்பை 11

# தனியார் காணியை ஊடறுத்து அமைக்கப்பட்ட வீதி திறப்பு

### சத்தம் சந்தடியின்றி இராணுவத் தளபதி தலைமையில் நேற்று நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக. 27
கட்டுவன் - மயிலிட்டி வீதி, இராணுவத்தினரால் மூடப்பட்டிருந்த 480 மீற்றர் வீதியானது, வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் புனரமைக்கப்பட்ட நிலையில் இராணுவ தளபதி விக்கும் லியனகேவால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. வீதி அபிவிருத்தி 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கோத்தா பிரதமரானால் பெரமுன எதிர்க்காதாம்

**கொழும்பு, ஓக. 27**
**முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச இலங்கைக்கு வருகை தந்ததன் பின்னர், பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டால் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப் போவதில்லை என்று பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.**

பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் நேற்றுமுன்தினம் ஊடகச் சந்திப்பொன்றை நடத்தினார்கள். இதன்போது, ஊடகவியலாளர் ஒருவர் 'கோத்தாபய ராஜபக்சவுக்கு பிரதமர் பதவியை வழங்க விருப்பமா?' என வினவினார். அதற்குப் பதிலளித்த பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே, 'எங்களுக்கு விருப்பம்தான். கண்டிப்பாக வாக்களிப்போம்' -என்றார்.

பொதுஜன பெரமுனவின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினர் மேஜர் பிரதீப் உந்துகொட, 'கோத்தாபய ராஜபக்ச விரைவில் இந்த நாட்டுக்கு வரவேண்டும். அவருக்கு பாதுகாப்பு வழங்கப்படவேண்டும். எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. அவர் 69 லட்சம் மக்களின் வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி. அப்படியானால் அவர் பிரதமர் ஆவதை யாருக்குத்தான் பிடிக்காது? நான் அதற்கு எதிரானவன் இல்லை, அவர் கேட்டால் அவருக்கு வாக்களிப்போம்' -என்றார். (ம)

## தனியார் பேருந்துகள் நேற்று மட்டுப்பாடு!

கொழும்பு, ஓக. 27
தனியார் பேருந்துச் சேவைகள் நேற்று மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இடம்பெற்றன என்று இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

தனியார் பேருந்துகளுக்கு நேற்றுமுன்தினம் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்ட டீசல் வழங்கப்படாததை அடுத்தே நேற்றையதினம் தனியார் பேருந்துச் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டன என்று தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (ம)

## இலங்கைக்கு பயணிக்காதீர்
## பிரிட்டன் மக்களுக்கு அந்த அரசு எச்சரிக்கை

அத்தியாவசிய விடயங்களை தவிர்த்து இலங்கைக்குப் பயணிக்கவேண்டாமென்று பிரிட்டன் தனது மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

இலங்கையில் அண்மையில் நிலவிய அரசியல் குழப்பங்கள் மற்றும் பொருளாதார நலிவு நிலையை அடுத்து இந்த எச்சரிக்கையை பிரிட்டன் அரசு ஏற்கனவே பிறப்பித்திருந்தது. இந்த நிலையில், தற்போதும் அந்த எச்சரிக்கையைத் திரும்பப் பெறாமல் தொடர்வதற்குத் திட்டமிட்டுள்ளதாக பிரிட்டன் தெரிவித்துள்ளது. (ம)

## அரசாங்கத்துக்கு எதிராக மீண்டுமொரு மக்கள் போர்
### முஜிபுர் ரஹ்மான் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 27
நாட்டைக் கட்டியெழுப்புவதில் அரசாங்கத்துக்கு அக்கறையில்லை. அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் அடக்கு முறைகளுக்கு எதிராக மீண்டும் ஒரு மக்கள் எழுச்சிப் போராட்டம் ஆரம்பமாகப்போகும் நாள் வெகுதொலைவில் இல்லை - என்று தெரிவித்தார் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒருபுறம் சர்வகட்சி அரசாங்கத்துக்கு அழைப்பு விடுத்துக்கொண்டிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மறுபுறம் இளைஞர்களுக்கு எதிரான அடக்குமுறையைப் பிரயோகித்துக் கொண்டிருக்கிறார். காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கைது செய்வதே தற்போது பொலிஸாரின் பிரதான கடமையாகவுள்ளது.

இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்துக்கொண்டு போலியாக, சர்வகட்சி அரசாங்கத்துக்கு அழைப்பு விடுக்கவேண்டாமென்று ஜனாதிபதியிடம் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு சர்வதேசம் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொள்வதிலும் இது தாக்கம் செலுத்தும். காரணம் சர்வதேச நாணய நிதியம் என்பது தனியொரு நிறுவனம் அல்ல.

மேற்குலக நாடுகள் பல அதில் அங்கத்துவம் வகிக்கின்றன. இந்த நாடுகள் இலங்கை மீது தொடர்ந்தும் அதிருப்தி கொள்ளுமாயின், அது எமக்கு அழுத்தமாக அமையும்.

அரசாங்கம் நாட்டை மேலும் மேலும் வீழ்ச்சியடைச் செய்வதற்கான நடவடிக்கைகளையே முன்னெடுத்துக்கொண்டிருக்கிறது.

பொருளாதார நெருக்கடிகளுக்கு எதிராக குரல் கொடுத்த மக்கள், இவ்வாறான அடக்குமுறைகளுக்கு எதிராகவும் எழுச்சிப் போராட்டங்களை முன்னெடுக்கப்போகும் காலம் வெகுதொலைவில் இல்லை -என்றார். (ம)

## நாட்டின் ஜனநாயகத்துக்கு அரசாங்கத்தால் மரணஅடி
### சஜித் ஆவேசம்

கொழும்பு, ஓக. 27
நாட்டின் ஜனநாயகத்துக்கு மரணஅடி கொடுத்து மக்களின் உரிமைகளை மீறுவதுடன் மக்களின் வாழ்வுக்கான சுதந்திரத்தையும் அரசாங்கம் முடக்கி வருகின்றது- இவ்வாறு தெரிவித்தார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.



கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் வடகொழும்புப் பிரிவு பிரதிநிதிகளை நேற்றுமுன்தினம் சந்தித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போராட்டத்துக்குப் பங்களித்த இளைஞர்களை அரசாங்கம் வேட்டையாடுகின்றது. இதற்கு வசந்த முதலிகே போன்ற இளைஞர்கள் பலியாகியுள்ளனர்.

அரசாங்கத்துடன் இரகசிய ஒப்பந்தம் போடும் நபர்களுக்கு ஒரு சட்டமும், போராட்டத்தில் ஈடுபடும் மக்களுக்கு மற்றொரு சட்டமும் பிரயோகிக்கப்படுகின்றது.

இந்த அவல நிலையை உடனடியாக மாற்ற வேண்டும்- என்றார். (ம-14)

## பாடசாலை சேவையில் ஈடுபடும் பேருந்துகளுக்கு கியூ ஆர் முறை

யாழ்ப்பாணம், ஓக. 27
வடமாகாண ஆளுநரின் அறிவுறுத்தலுக்கமைவாக தற்போது வடமாகாணத்தில் பாடசாலை போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் பேருந்துகளை வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் மாவட்ட அலுவலகங்களில் இரண்டு வார காலத்துக்குள் பதிவை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

"கியூஆர்" குறியீட்டு முறைமையை பேருந்துகளுக்கு அறிமுகப்படுத்தும் பொருட்டு சில மேலதிக தகவல்களைப் பெறுவதற்கும் இந்தப் பதிவு அவசியமாகின்றது.

இது தொடர்பான மேலதிக விவரங்கள் தேவைப்படுபவர்கள் மாவட்டச் செயலகங்களில் உள்ள வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் மாவட்ட அலுவலகங்களைத் தொடர்புகொள்ளுமாறு வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவர் சுப்பையா அமிர்தலிங்கம் அறிவித்துள்ளார். (14)

## பயங்கரவாதத் தடைச்சட்டத்தால் இலங்கை ஓரங்கட்டப்படலாம்
### முன்னாள் சபாநாயகர் கருஜயசூரிய தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 27
ஜனநாயகம் மற்றும் மக்களின் அடிப்படை உரிமைகளை மதிக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தவறாகப் பயன்படுத்தி, அரசியல் மற்றும் சிவில் செயற்பாட்டாளர்களை நசுக்குவது மிகவும் மோசமான நிலை. இது இலங்கை சர்வதேச ரீதியாக ஓரங்கட்டப்படுவதற்கு காரணமாக அமையும் என்று நீதியான சமூகத்துக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அனைத்து பல்கலைக்கழகங்களின் ஒருங்கிணைப்பாளர் உட்பட சிவில் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்கள் குழுவொன்றை பயங்கரவாதத் தடைச் சட்டத்தை பயன்படுத்தி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தாமல் 90 நாள்கள் விளக்கமறியலில் வைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அரசமைப்பின்படி குடிமக்களுக்கு வழங்கப்படும் உரிமைகளையும், கருத்து வேறுபாடுகளையும் மதித்து ஒரு சிறந்த நாட்டைக் கட்டியெழுப்ப விரும்பும் நாகரிக சமூகம் இத்தகைய நிலையை சற்றும் எதிர்பார்க்கவில்லை.

அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் நாடு தற்போது பெரும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது.

இவ்வாறான சூழலில் எமது நாட்டிலும் சர்வதேச சமூகத்தினரிடையேயும் பெரும் எதிர்ப்பை ஏற்படுத்திய பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்ற அதீத சட்டங்களை நாம் தொடர்ந்தும் ஏற்றுக்கொண்டால், அது நிச்சயமாக நாம் ஒரு நாடாக சர்வதேசரீதியாக ஓரங்கட்டப்படுவதற்கு காரணமாக அமையும்.

இவ்வாறான செயற்பாடுகள் எமது நாட்டுக்கு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் -என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வீணாகிப் போனதா போராட்டம்?

இலங்கை வரலாற்றில் எப்போதுமில்லாத ஒரு மக்கள் போராட்டம் கடந்த சில மாதங்கள் அரங்கேறியது. எவருமே நினைத்துப் பார்த்திருக்க முடியாதளவுக்கு மாற்றங்களையும் அந்தப் போராட்டம் நிகழ்த்திக் காட்டியது. சிங்கள மக்களின் போர்வெற்றி நாயகர்களாக – இரட்சகர்களாக– மன்னர்களாக– நோக்கப்பட்ட ராஜபக்ச குடும்பத்தை அதே சிங்கள மக்கள் வீதிக்கு விரட்டி தப்பியோடும் அளவுக்குச் செய்தனர். தனியே ராஜபக்ச குடும்பத்துக்கு எதிரான போராட்டமாக மாத்திரம் சுருங்கிவிடாமல் இந்த நாட்டின் மோசமான=கடைந்தெடுத்த– கீழ்த்தரமான –ஆட்சி முறைமைக்கு எதிராகவும், அத்தகைய சீரழிந்த அரசியல் முறைமையால் உருவாக்கப்பட்ட பொருளாதார நெருக்கடிக்கு எதிராகவும் கோபம் மக்களிடம் கொப்பளித்தது.

இந்தக் கோபமும் அதன் விளைவாக உருவான தொடர் போராட்டமும் படிப்படியாக ராஜபக்சக்கள் ஒவ்வொருவரையும் அரசியல் அரங்கின் உச்சத்திலிருந்து கீழே விழுத்தியது. ஏணியும் பாம்பும் விளையாட்டில் பாம்பின் வாயில் அகப்பட்டவர்கள் போல ராஜபக்சக்கள் அதிகாரக் கட்டிலில் இருந்து 'சர்ரென' கீழே வீழ்த்தப்பட்டனர்.

போராட்டங்களின் விளைவாகவே, மக்களால் நிராகரிக்கப்பட்ட, கட்சிக்கு தேசிய ரீதியில் கிடைத்த வாக்குகளின் அடிப்படையில் ஒரே ஒரு ஆசனத்தைப் பெற்ற ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டின் பிரதமராகி, ஜனாதிபதியுமாகியுள்ளார். தன்னை ஏற்றிய போராட்டம் என்ற ஏணியை ரணில் விக்கிரமசிங்க எட்டி உதைத்து மிதித்துள்ளமை வேறு கதை. 4 போராட்டக்காரர்களின் உயிர்கள் பறிக்கப்பட்ட பின்னரும், இந்த நாட்டு மக்கள் எதற்காக இவ்வளவு தூரம் கஷ்டப்பட்டு போராடினார்களோ, அந்த இலக்கை உண்மையாகவே அடைந்தார்களா? அல்லது மக்கள் வெற்றியீட்டியதைப் போல நம்பவைக்கப்பட்டு மீண்டுமொருமுறை அரசியல்வாதிகளால் ஏமாற்றப் பட்டனரா? என்ற சந்தேகம் இப்போது பலமாக எழத்தொடங்கியுள்ளது.


ஏனெனில், எந்தக் குடும்பத்தின் ஆட்சியால் இவ்வளவு சீரழிவும் நாட்டுக்கு ஏற்பட்டதோ, மக்களின் இப்போதைய அவலத்துக்குக் காரணமானவர்கள் யாரோ, அவர்களை மீளவும் ஆட்சி அதிகாரத்தில் அமர வைப்பதற்கான வேலைத் திட்டங்கள் எந்த எதிர்ப்பும் இன்றி துரிதமாக முன்னெடுக்கப்படுவதைப் பார்க்கும்போது, மேற்குறித்த சந்தேகம் எழுவது தவிர்க்கவியலாததே. ரணில் விக்கிரமசிங்க என்ற முகமூடியைப் பயன்படுத்தி, தமக்கு எதிரான போராட்டக்காரர்கள் எல்லோரையும் ராஜபக்சக்கள்– பெரமுனவினர் –வேட்டையாடி விட்டனர். அதிகாரத்தரப்புக்கு எதிராக எவருமே இனிக் கிளர்ந்தெழாதவாறு போராட்டத்தை முன்னின்று செயற்படுத்தியோர் அடக்கி –ஒடுக்கி –சிறைக்குள் அடைக்கப்பட்டுள்ளனர். இப்போது எதிர்ப்புக்கள் எவையும் இல்லை என்பதை உறுதி செய்துகொண்டு, கொஞ்சம் கொஞ்சமாக ஆட்சிக்கு வர ராஜபக்சக்கள் முயல்கின்றனர். சர்வகட்சி அரசாங்கம், தேசிய அரசாங்கம் என்று சொல்லி திட்டமிட்டே, காலம் கடத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றது. எல்லாவற்றுக்கும் பிரதான சிக்கலாக இழையோடிக்கொண்டிருப்பது பெரமுனவின் ஆதிக்கமே.

அமைச்சரவையில் பெரமுனவினருக்கு அதிக இடம் வழங்கப்படப்போகின்றது என்பதை பிரதமர் தினேஷ் குணவர்த்தன மறைமுகமாக, அதேவேளை தெளிவாகத் தெரிவித்திருக்கின்றார். அதிலும் ராஜபக்சக்களின் அடுத்த வாரிசு என்று அறிவிக்கப்படும் நாமல் ராஜபக்சவுக்கும் அமைச்சரவையில் இடமளிக்கப்படப்போகின்றது என்றும் கூறப்படுகின்றது. அதேவேளை, கோத்தாபய நாட்டுக்கு மீண்டும் வந்து பிரதமராக வர ஆசைப்பட்டால், கட்டாயம் அவருக்கே பெரமுன வாக்குகள் இருக்கும் என்றும் அந்தக் கட்சியினர் பகிரங்கமாகச் சொல்கின்றனர். என்னதான், நாட்டுமக்கள் பெரமுன மீது கொலைவெறியில் இருந்தாலும், இன்னமும் நாடாளுமன்றில் அறுதிப்பெரும்பான்மையோடுதான் பெரமுன இருக்கின்றது. எனவே பெரமுன மனம்வைத்தால், கோத்தாபயவைப் பிரதமராக்குவதென்பது கடினமான காரியமல்ல. இப்படியெல்லாம், பகடைக்காய்களை வெட்டியெறிந்துவிட்டு, பழையபடி அதே ராஜபக்சக்கள் தான் மீண்டும் அதிகாரத்துக்கு வரப்போகின்றார்கள் என்றால் கடந்த 3 மாதங்களுக்கு மேலாக நடத்தப்பட்ட போராட்டத்தின் விளைவுதான் என்ன? அந்தப் போராட்டத்தால் ஏற்பட்ட மாற்றம்தான் என்ன? நல்லதோர் வீணை செய்தே, அதை நலங்கெடப் புழுதியில் எறிந்த கதையாகிற்றே காலிமுகத்திடல் போராட்டம்.

## நாளொரு நல்வார்த்தை

"உயர்ந்த இடத்தில் இருக்கும் போது உலகம் உன்னை மதிக்கும் உன் நிலைமை கொஞ்சம் இறங்கி வந்தால் நிழலும் கூட மிதிக்கும்"

- கண்ணதாசன்





# புலம்பெயர் உறவுகளிடம் உதவிகோரி கவனவீர்ப்பு!

**கிளிநொச்சி, ஓக. 27**

**புலம்பெயர் உறவுகள் இலங்கை மக்களை வறுமையில் இருந்து மீட்க வேண்டும் என்று வலியுறுத்தி, பூநகரி பிரதேச செயலகம் முன்பாக நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.**

'புலம்பெயர் உறவுகளே உங்கள் உறவுகளை வறுமையிலிருந்து மீட்டெடுங்கள்', 'உங்கள் முதலீடு தேவையான காலம் இது', 'அரிசிப் பை வேண்டாம்' உள்ளிட்ட வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். புலம்பெயர் உறவுகள் நாட்டுக்கு டொலரை அனுப்பவேண்டும் என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர்.

(ம-113)

# அதிக விலையில் முட்டை விற்பனை: பேக்கரி உற்பத்தியாளர்கள் பாதிப்பு!

கிளிநொச்சி, ஓக. 27

அதிக விலையில் முட்டை விற்பனை செய்யப்படுவதால், தாம் கடும் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளதாக பேக்கரி உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பேக்கரி உற்பத்தியாளர்கள் தெரிவித்ததாவது:-

முட்டையின் விலை 50 ரூபா தொடக்கம் 65 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது. அத்துடன் கோதுமை மா, மாஜரின் மற்றும் பாண் உற்பத்திக்குத் தேவையான அனைத்துப் பொருள்களின் விலையும் பலமடங்கு அதிகரித்துள்ளது. இதன் காரணமாக பேக்கரி உற்பத்திகளை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலை தொடருமானால் பேக்கரி உற்பத்திகளை முற்றுமுழுதாக நிறுத்த வேண்டிய நிலை ஏற்படும். இதனால் பேக்கரி உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும். இது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கை எடுத்து பேக்கரி உற்பத்திப் பொருள்களை நியாய விலையில் பெறுவதற்கு உரிய தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் - என்றனர்.

(ம-14,113)

நாளை

28.08.2022 ஞாயிற்றுக்கிழமை ஆவணி 12

சுபநேரம் : 09.05 - 10.35


ராகுகாலம்: 04.35 - 06.05


தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கொடி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தனுக்கு நேற்றுத் தீர்த்தோற்சவம்







யாழ்ப்பாணம், ஓக. 27
வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி தேவஸ்தானத்தின் தீர்த்தோற்சவம் நேற்றுக்காலை வெகுசிறப்பாக இடம்பெற்றது.

பஞ்ச தெய்வங்களாகிய பிள்ளையார், அலங்காரவேலன், வள்ளி, தெய்வானை, சண்டேஸ்வரபெருமான் ஆகிய தெய்வங்களுக்கு வசந்த மண்டபத்தில் விசேட அபிஷேகங்கள், ஆராதனைகள் இடம்பெற்று எலி, மயில், அன்னம், இடபம் ஆகிய வாகனங்களில் வீற்று உள்வீதியுடாக வலம் வந்து வெளிவீதியில் பக்தர்களுக்கு அருள் பாலித்தனர்.

நாட்டின் பலபாகங்களிலும் இருந்து பல ஆயிரக்கணக்கான பக்தர்கள் தீர்த்தோற்சவத்தில் கலந்துகொண்டு நல்லையம்பதி அலங்காரக்கந்தனின் அருட்கடாட்சத்தைப் பெற்றதுடன் நேர்த்திக்கடன்களையும் நிறைவேற்றினர். (ம-14,27)

# தெல்லிப்பழை துர்க்கை அம்மனுக்கு நாளை கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஓக. 27
வரலாற்றுச் சிறப்புமிக்க தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய வருடாந்த உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பன்னிரு தினங்கள் நடைபெறவுள்ள உற்சவத்தில் எதிர்வரும் 30ஆம் திகதி திருமுறைத் திருவிழாவும் எதிர்வரும் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை திருமஞ்சத் திருவிழாவும் எதிர்வரும் 5ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும் மறுநாள் ஆறாம் திகதி சப்பை ரதத் திருவிழாவும் எதிர்வரும் 7ஆம் திகதி புதன்கிழமை தேர்த் திரு விழாவும் மறுநாள் 8ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன.

உற்சவம் நடைபெறும் சகல தினங்களும் அன்னதானம் அடியவர்களுக்கு வழங்கப்படும்.

அத்துடன் ஆலயத்துக்கு வருகை தரும் அடியவர்கள் புனிதத் தன்மையைப் பாதுகாப்பதுடன் தமிழ் கலாசார ஆடை அணிந்து வருவது அவசியமாகும்.

மேலும் உற்சவ காலத்தைப் பயன்படுத்தி சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவோருக்கு எதிராக உரிய சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஆலய நிர்வாகத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)





# சைவமுரசு வெளியீடு!

யாழ்ப்பாணம், ஓக. 27
சிவயோகர் சுவாமி தவம் இயற்றிய 'சைவமுரசு' மலர் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் சப்பை ரதத் திருவிழாவன்று நல்லூர் அறுபத்து மூவர் மடத்தில் தமிழ்ச் சைவப் பேரவையால் வெளியிடப்பட்டது.

தமிழ்ச் சைவப் பேரவைத் தலைவர் முன்னாள் நீதிபதி வசந்தசேனன் மலரை வெளியிட்டு வைக்க, கீரிமலை மெய்கண்டார் ஆதீனம் தவத்திரு உமாபதி சிவம் அடிகளார் முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

இணை இதழாசிரியர் மருத்துவர் பரா.நந்தகுமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சிறப்புரையை சைவ வித்யா விருத்திச் சங்க தலைவர் சோ.பத்மநாதன் ஆற்றினார். (ம-14,125)



# ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி ஆலய வருடாந்தத் தீர்த்தத் திருவிழா

யாழ்ப்பாணம், ஓக. 27
அருள்மிகு பேசாலை ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தின் தீர்த்தத் திருவிழா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது.

இதன்போது பால்காவடி, பறவைக்காடி, பாற்செம்பு காவடிகள் எடுத்து பக்தர்கள் தமது நேர்த்திகளை நிறைவேற்றினர். (ச-60)



நல்லூர்க் கந்தனின் ஆலய வளாகத்தில், வேலணைப் பகுதியைச் சேர்ந்த சிவகுமார் என்பவரால் உருவாக்கப்பட்ட மணல் சிற்பங்கள் அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளன. (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் பணவீக்கம் ஜூலையில் அதிகம்

## மத்திய வங்கி சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 27

தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணுக்கு அமைவாக மதிப்பிடப்படும் நாடளாவிய ரீதியிலான பணவீக்கம் கடந்த ஜூன் மாதம் 58.9 சதவீதமாகப் பதிவாகியிருந்த நிலையில், அது ஜூலை மாதத்தில் 66.7 சதவீதமாக உயர்வடைந்துள்ளது.

உணவு மற்றும் உணவல்லாப் பொருள்களின் மாதாந்த விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பால் இவ்வாறு பணவீக்கம் உயர்வடைந்துள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ள இலங்கை மத்திய வங்கி, கடந்த ஜூன் மாதம் 75.8 சதவீதமாகக் காணப்பட்ட உணவுப்பணவீக்கம் ஜூலை மாதத்தில் 82.5 சதவீதமாகவும், கடந்த ஜூன் மாதம் 43.6 சதவீதமாகக் காணப்பட்ட உணவல்லாப் பணவீக்கம் ஜூலையில் 52.4 சதவீதமாக அதிகரித்திருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

கடந்த ஜூனில் பால்மா, அரிசி, உடன் மீன்கள், பிஸ்கட்டுகள் மற்றும் கோழி இறைச்சி உள்ளிட்ட உணவுப்பொருள்கள் மற்றும் எரிபொருள், தளபாடங்கள், வீட்டு உபகரணங்கள், வீடமைப்பு, நீர், மின்சாரம், எரிவாயு போன்ற உணவல்லாப் பொருள்களின் விலைகள் மற்றும் கட்டணங்களில் முறையே 2.42 மற்றும் 3.15 சதவீத அதிகரிப்பு அவதானிக்கப்பட்டமையையடுத்து, தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் ஏற்படக்கூடிய மாதாந்த மாற்றம் கடந்த ஜூலையில் 5.57 சதவீதமாகப் பதிவானது.

எனவே தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணை அடிப்படையாகக்கொண்டு கணிப்பிடப்படும் பணவீக்கத்திலும் மேற்குறிப்பிட்டவாறான அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதாக மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது. (ம)

# இலங்கை சிறுவர்களுக்கு மந்தபோசணை குறைபாடு

## யுனிசெப் அறிக்கை

unicef
for every child

**கொழும்பு, ஓக. 27**

**உலகளாவிய ரீதியில் மந்தபோசணையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை உயர்வாகக் காணப்படும் முதல் 10 நாடுகளின் பட்டியலில் இலங்கையையும் உள்ளடக்கியுள்ளது யுனிசெப் அமைப்பு. நாடளாவிய ரீதியில் சுமார் 2.3 மில்லியன் சிறுவர்கள் மனிதாபிமான உதவிகள் தேவைப்படும் நிலையில் உள்ளனர் என்றும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.**

இந்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஜூன் மாதம் 30ஆம் திகதி வரையான கடந்த 6 மாத காலப்பகுதியில் தெற்காசிய நாடுகளின் மனிதாபிமான நிலைவரம் எவ்வாறானதாகக் காணப்பட்டது என்பதைப் பகுப்பாய்வுசெய்து, அதன்மூலம் கண்டறியப்பட்ட விடயங்களை உள்ளடக்கிய அரையாண்டு அறிக்கையொன்றை யுனிசெப் அமைப்பு வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கும் முக்கியமான விடயங்கள் வருமாறு:-

இலங்கையில் தீவிரமடைந்துள்ள பொருளாதார நெருக்கடியின் விளைவாக சிறுவர்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அதிகரித்து வரும் உணவு மற்றும் எரிபொருள் விலைகள், தொடர்ச்சியான மின்வெட்டு, உயிர்காக்கும் மருந்துப் பொருள்களுக்கான தட்டுப்பாடு ஆகியன வறிய மற்றும் பின்தங்கிய சமூகப்பிரிவினர் மீது தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன.

நாடளாவிய ரீதியில் சுமார் 2.3 மில்லியன் சிறுவர்கள் உள்ளடங்கலாக 5.7 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் மனிதாபிமான உதவிகள் தேவைப்படும் நிலையில் இருப்பதுடன் அவர்களுக்கு அவசியமான போசணை, கல்வி மற்றும் நிதிசார் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கான உதவி வழங்கல் நடவடிக்கைகளை யுனிசெப் அமைப்பு ஆரம்பித்துள்ளது.

மேலும் உலகளாவிய ரீதியில் சிறுவர்கள் மத்தியில் மந்தபோசணை உயர்வாகக் காணப்படும் முதல் 10 நாடுகளின் பட்டியலில் இலங்கை உள்ளடங்குவதுடன் இந்த எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்தியாவசியப் பொருள்களுக்கு ஏற்பட்டிருக்கும் தட்டுப்பாட்டின் காரணமாக அவசர சுகாதாரசேவை வெகுவாகப் பாதிக்கப்பட்டிருப்பதுடன் கல்வியைப் பெறுவதற்கான இயலுமை மற்றும் சிறுவர் பாதுகாப்பு ஆகியவற்றின்மீதும் தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன.

அதேவேளை குடும்பங்களின் வருமான இழப்பின் விளைவாக சிறுவர்கள் வன்முறைகள் மற்றும் மனவழுத்தத்துக்கு முகங்கொடுத்திருப்பதுடன் பாடசாலைகளுக்கு சமுகமளிக்காத மற்றும் பாடசாலைகளிலிருந்து இடைவிலகும், மாணவர்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளது -என்றுள்ளது. (ம)



# இலங்கைக்கு மேலும் 25 மில். டொலர் நிதி!

## யுனிசெப் வழங்கியது

கல்வி உட்பட மாணவர்களுக்குத் தேவையான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மாருக்கான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்காக இலங்கைக்கு மேலதிகமாக 25 மில்லியன் டொலர் ஒதுக்கப்பட்டுள்ளதாக யுனிசெப் அமைப்பின் தெற்காசியாவுக்கான பிராந்தியப் பணிப்பாளர் ஜோர்ஜ் லாயா அஜே தெரிவித்துள்ளார்.

தெற்காசியாவுக்கான பிராந்தியப் பணிப்பாளர் ஜோர்ஜ் லாயா அஜே தலைமையிலான யுனிசெப் அமைப்பின் சிரேஷ்ட பிரதிநிதிகள் குழுவுக்கும், பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இந்த விடயம் தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் தாம் இலங்கையுடன் இணைந்து செயற்படுவோம் என்றும், குறித்த வேலைத்திட்டங்களை எதிர்காலத்தில் மேலும் பரந்தளவில் முன்னெடுப்பதாகவும் யுனிசெப் அமைப்பின் தெற்காசியாவுக்கான பிராந்தியப் பணிப்பாளர் மேலும் குறிப்பிட்டார். (ம)



# மாணவர்களுக்கு வழங்க 3,000 தொன் உணவுகள்

## அமெரிக்கா நன்கொடை

கொழும்பு, ஓக. 27

இலங்கையிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு வழங்குவதற்காக 3 ஆயிரம் மெற்றிக் தொன் உணவை நன்கொடையாக அமெரிக்கா வழங்கியுள்ள்து.

பாடசாலை மாணவர்களுக்கு போசாக்கினை வழங்குவதற்காக அமெரிக்க விவசாயத் திணைக்களத்தின் ஊடாக இந்த நன்கொடை வழங்கப்பட்டுள்ளது. (ம)



# அமிர்தலிங்கத்தின் பிறந்தநாள்: வலி. மேற்கில் கடைப்பிடிப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 27

தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவரும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 95ஆவது பிறந்தநாள், வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் முன்றலில் அமைந்துள்ள அமிர்தலிங்கத்தின் திருவுருவச்சிலையில் நேற்றுக்காலை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது அமிர்தலிங்கத்தின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு பொதுமக்களால் மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

பண்ணாகம் அண்ணாகலைமன்றம் மற்றும் பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வலி. மேற்கு பிரதேசசபைத் தவிசாளர் த.நடனேந்திரன், வலி.மேற்கு பிரதேசசபையின் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள், பண்ணாகம் அண்ணா கலை மன்றத்தினர், பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-14-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூரைபிரித்துத் திருட்டு: சந்தேகநபர் கைதானார்

யாழ்ப்பாணம், ஓக. 27

கூரை பிரித்துத் திருட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் சந் தேகத்தின் அடிப்படையில் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார் என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டு தெற்கு மூளாய்ப் பகுதியில் உள்ள வீட்டின் உரிமை யாளர் வெளிநாட்டிலுள்ள நிலையில், உரிமையாள ரின் சகோதரர்கள் அந்த வீட்டில் வசித்து வந்துள்ள னர்.

அதில் ஒரு சகோதரர் போதைக்கு அடிமையாகி வீட் டிலுள்ள இலத்திரனியல் பொருள்களை வீட்டின் கூரையைப் பிரித்து திருடிச்சென்று விற்பனை செய் துள்ளார் என்று வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. முறைப் பாட்டுக்கமைய விசாரணைகளை முன்னெடுத்த வட்டுக்கோட்டைப் பொலிஸார், சந்தேகநபரான 47 வயதுடைய நபரைக் கைது செய்ததுடன் மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர். (ம-14,27,125)

# இலங்கையில் கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்களை உடன் விடுவியுங்கள்

## இந்திய ஒன்றிய அரசுக்கு மு.க.ஸ்டாலின் வலியுறுத்து

சென்னை, ஓக. 27



**இலங்கைக் கடற்படையால் கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 10 பேரை விடுவிப்பதற்கும், கடற்படையின ரின் கட்டுப்பாட்டிலுள்ள 94 படகுகளை மீட்பதற்கும் நடவ டிக்கை எடுக்குமாறு தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் இந்திய ஒன்றிய அரசை வலியுறுத்தியுள்ளார்.**

இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு அனுப்பிவைத்திருக்கும் கடிதத்தில் கடந்த 22ஆம் திகதி இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப் பட்ட 10 மீனவர்கள் தொடர்பிலும் கடற்படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்ட அவர்களது படகுகள் தொடர்பிலும் சுட்டிக்காட்டி யுள்ள தமிழக முதலமைச்சர் ஸ்டாலின், அவர்களை விடுவிப்ப தற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியுள்ளார்.

'இது கடந்த ஜூன் மாதத்திலிருந்து நிகழும் 5ஆவது சம்பவமாகும். இவ்வாறான நடவடிக்கைகள் மீன வர்களை ஒடுக்குவதுடன் அவர்களது வாழ்வாதாரத்தையும் வெகுவாகப் பாதிக்கின்றது' என்றும் தமிழக முத லமைச்சர் வெளிவிவகாரத்துறை அமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதுவரை தமிழக மீனவர்க ளின் 94 படகுகள் இலங்கைக் கடற் படையினரின் கட்டுப்பாட்டில் இருப் பதுடன், படகுகளின் உரிமையாளர் கள் அதனை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை நீதிமன்றத்தில் நேரடி யாக முன்னிலையாகவேண்டும் என்ற நிபந்தனையுடன் ஏற்கனவே கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் சிலர் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக் கது. (ம)

# 'பன்னாட்டு குற்றங்கள்' நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஓக. 27

இ.நா.ஸ்ரீஞானஸ்வரன் எழுதிய 'பன்னாட்டு குற்றங் கள்' நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கி ழமை யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள் ளது.

யாழ்.பல்கலைக்கழக ஊடகக்கற்கைகள் துறைத் தலைவர் பேராசிரியர் சி.ரகுராம் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பி னர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் 'பன்னாட்டு குற்றங்களும் தமிழினமும்' என்ற தலைப்பில் சிறப் புரையாற்றவுள்ளார். (ம-14,20)



பலாலி சந்திப்பகுதியில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட நல்லிணக்க மையம் இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகேவால் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. (ம-26)

# நாகதேவன் இறங்குதுறை வீதியை சீரமைத்துத் தருமாறு கோரிக்கை!



கிளிநொச்சி, ஓக. 27

பூநகரி பிரதேசத்துக்குட்பட்ட நாக தேவன் இறங்குதுறைக்குச் செல் லும் வீதியைப் புனரமைத்துத் தருமாறு ஞானிமடம் மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பில் மீனவர்கள் தெரிவித் ததாவது:-

நாகதேவன் துறை இறங்குதுறை வீதி கடந்த 1990 ஆம் ஆண்டுக் குப் பின்னரான காலப்பகுதியிலி ருந்து சீரமைக்கப்படவில்லை. கடந்த 2012 ஆம் ஆண்டு வரை யான காலப்பகுதியில் இந்தப்பகு திக் கடலில் கடற்றொழில் நடவ டிக்கை மேற்கொள்ளப்படவில்லை. தற்போது நூற்றுக்கும் மேற்பட்ட மீனவர்கள் கடற்றொழிலில் ஈடு பட்டு வருகின்றனர். இந்த நிலை யில் குறித்த கடல் பகுதிக்குச் செல்லும் வீதியும் இறங்குதுறை யும் நீண்ட காலமாக சீரமைக்கப் படாத நிலையில் காணப்படுகி றன. இதனால் நாம் கடற்றொழி லுக்கு செல்வதில் பெரும் சிரமங் களை எதிர்கொள்கிறோம். எனவே குறித்த வீதியையும் இறங்கு துறை யையும் விரைவில் சீரமைத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கின் றோம் - என்றனர். (ம-14,113)

# கிளி. தமிழ்ச்சங்கத்தின் பொதுச்சபைத் தெரிவு

கிளிநொச்சி, ஓக. 27

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத் தின் பளைக் கிளைக்கான உறுப்பி னர்கள் மற்றும் பொதுச்சபைத் தெரிவு கடந்த வாரம் பச்சிலைப்பள் ளிப் பிரதேசசெயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தின் நிறுவு நரும் வாழ்நாள் தலைவருமாகிய வே.இறைபிள்ளை தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது தமிழ்ச்சங்கத்தின் பளைக் கிளைக்கான காப்பாளர்க ளாக பதவிவழியில் பிரதேச செயலர் சி.வ.கிருஷ்ணேந்திரன், பளைக் கோட்டக்கல்வி அதிகாரி தி.திலீபன் ஆகியோரும் இணைப்பாளராக கலாசார உத்தியோகத்தர் சி.முகுந்த னும் நியமிக்கப்பட்டனர்.

பளைக் கிளைக்கான செயற்குழு உறுப்பினர்களாக செல்வன்.செ. கஜானனன், சி.அம்பிகைபாகன், சி. நிமலகாந்தன், செல்வி.ம.அனோஜா, திருமதி.நே.ரஞ்சிதமலர், செ.நாக செல்வம், நா.நகுலேஸ்வ ரன், திரு மதி.நே.லூர்த்தகவி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். அதனைத் தொடர்ந்து நிர்வாக உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். (ச-13)

# சட்டவிரோதமாக கால்நடைகளை ஏற்றிச்சென்றோர் நேற்றுக் கைது!

கிளிநொச்சி, ஓக. 27

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிர மந்தனாறுப் பகுதியில் அனுமதிப்பத்தி ரத்துக்கு முரணான வகையில் லொறி யில் கால்நடைகளை ஏற்றிச்சென்ற சந்தேகநபர்கள் இருவரை நேற்று பொலி ஸார் கைதுசெய்துள்ளனர்.

தருமபுரம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மேற்கொள் ளப்பட்ட சோதனை நடவடிக்கையி லேயே குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களை மேலதிக விசாரணைகளின் பின் கிளிநொச்சி



நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-113)

# கலந்துரையாடல்

சாவகச்சேரி ஓக. 27

சாவகச்சேரி நகரசபையால் நுணாவில் பகுதியில் அமைக் கவுள்ள சிறுவர் பூங்கா தொடர் பான ஆலோசனைக் கூட்டம் நகரசபை பொன்விழா மண்ட பத்தில் நாளை ஞாயிற்றுக்கி ழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் பொதுமக்களையும் நலன் விரும்பிகளையும் கலந்து கொள்ளுமாறு தவிசாளர் திரு மதி சிவமங்கை இராமநாதன் கேட்டுக்கொண்டுள்ளார். (ய-9)

# குருதிக்கொடை

கொடிகாமம் ஓக.27

சுயாதீன ஊடகவியலாளர் ஞானப்பி ரகாசம் பிரகாஸின் முதலாம் ஆண்டு நினைவுதினத்தை முன்னிட்டு அவரது நண்பர்களால் நடத்தப்படும் குருதிக்கொடை முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிமுதல் மாலை 3.30 மணிவரை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. ஆர்வமுடை யவர்கள் குறித்த நேரத்துக்கு வருகை தந்து குருதிக்கொடை வழங்கக முடி யும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ய-159)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## காலபோக நெற்செய்கைக்கு கைதடியில் டீசல் விநியோகம்

சாவகச்சேரி, ஓக. 27

கைதடி கமநல சேவைகள் நிலையத்தில் விவசாயிகளுக்கு நேற்று டீசல் விநியோகிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளின் காலபோக நெற்செய்கையின் ஆரம்பகட்ட பணிகளுக்காக இந்த டீசல் விநியோகிக்கப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விநியோகத்தின் போது டீசல் பெற்றுக்கொள்ளாத விவசாயிகள் தமது தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை மற்றும் ஏக்கர் வரி செலுத்திய தற்கான பற்றுச்சீட்டு ஆகியவற்றை சமர்ப்பித்து பெறலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

**SHANTHIHAM**
Association for Health & Counselling

சாந்திகம் உளவளத்துணை நிறுவனத்தினால் முல்லைத்தீவு மாவட்டத்தில் UNOPS அமைப்பின் நிதியனுசரணையில் நடைமுறைப்படுத்தப்பட உள்ள "இலங்கையின் பொருளாதார நெருக்கடிச் சூழலில் மக்களின் உணவுக்கான உத்தரவாதத்துடன் விவசாயம். வாழ்வாதாரம். போசணை மற்றும் பாதுகாப்பு தொடர்பான தேவைகளைப் பூர்த்தி செய்வதை உறுதி செய்தல்" எனும் அவசர கால திட்டத்தில் கீழ்வரும் பதவி நிலைகளுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இச் செயற்திட்ட பதவி நிலை வெற்றிடங்களுக்குப் பொருத்தமான. தகைமையுடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப் படுகின்றன. காலப்பகுதி – 5 மாதங்கள் (ஒப்பந்த அடிப்படை).தகுதியுள்ளோர் தங்களின் சுயவிபரக் கோவையினை 2022.08.31 ஆம் திகதிக்கு முன்னதாக கீழே தரப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**பதவி வெற்றிடங்கள்**

**திட்ட இணைப்பாளர்** (Project Coordinator) – 01
சமூக விஞ்ஞானம் அல்லது முகாமைத்துவம் அல்லது பொருத்தமான ஏதாவது தொடர்புபட்ட துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்றைப் பெற்றிருப்பதுடன் 03 வருடங்களுக்குக் குறையாத பணி அனுபவத்தையும் பெற்றிருத்தல் வேண்டும்.

**காசுக்கான வேலைத்திட்ட இணைப்பாளர்** (Project Coordinator - Cash for Work) – 01
சமூகவிஞ்ஞானம் அல்லது முகாமைத்துவம் அல்லது பொருத்தமான ஏதாவது துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்றைப் பெற்றிருப்பதுடன் 03 வருடங்களுக்குக் குறையாத பணி அனுபவத்தையும் பெற்றிருத்தல் வேண்டும்.

**கள உத்தியோகத்தர்** (Field Officer) - 04
சமூகவிஞ்ஞானம் அல்லது முகாமைத்துவம் அல்லது பொருத்தமான ஏதாவது துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்றைப் பெற்றிருப்பதுடன் 01 வருடத்திற்கு குறையாத பணி அனுபவத்தையும் பெற்றிருத்தல் வேண்டும்/குறைந்தது உயர்தரத்தில் 03 பாடங்களில் சித்திகளைப் பெற்றிருப்பதுடன் கள அலுவலராக 03 வருடங்களுக்குக் குறையாத பணி அனுபவத்தையும் பெற்றிருத்தல் வேண்டும்.

**உளவளத்துணையாளர்** (Counsellor) – 01 (ஆண்/பெண்)
உளவளத்துணை டிப்ளோமா கற்கை நெறியினைப் பூர்த்தி செய்திருப்பதுடன் 05 வருடங்களுக்குக் குறையாத பணி அனுபவத்தையும் பெற்றிருத்தல் வேண்டும்.

**நிர்வாக அலுவலர்** (Admin Officer) – 01
நிர்வாக முகாமைத்துவம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்றை பெற்றிருக்க வேண்டும். அத்துடன் குறித்த துறையில் 01 வருடங்களுக்குக் குறையாத பணி அனுபவத்தையும் பெற்றிருத்தல் வேண்டும்.அல்லது நிர்வாகத் துறையில் அங்கீகரிக்கப்பட்ட டிப்ளோமாவைப் பெற்றிருக்க வேண்டும். அத்துடன் குறித்த துறையில் 03 வருடங்களுக்குக் குறையாத பணி அனுபவத்தையும் பெற்றிருத்தல் வேண்டும்.

**சாரதி** (Driver) - 01
குறைந்தது க.பொ.த சாதாரண தரத்தில் 06 பாடங்களில் சித்திகளைப் பெற்றிருப்பதுடன் சாரதிப்பணியில் 05 வருடங்களுக்குக் குறையாத அனுபவத்தையும் பெற்றிருத்தல் வேண்டும்.

No.8,8/1, Katpahavinayakar Lane,
Off Kachcheri Nallur Road,
Jaffna.
021-222-3338
Email To - hr.shanthiham@gmail.com

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவில்லலும்

தோற்றம் 16 . 02 . 1951



மறைவு 28 . 07 . 2022

கடந்த (28.07.2022) வியாழக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

## அமரர் கிருஸ்ணமூர்த்தி புஸ்பம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 25.08.2022 வியாழக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (27.08.2022) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து. அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவுச்செய்தி கேட்டு நேரில் வருகை தந்தும். தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் ஏனைய வழிகளில் உதவியவர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**இல.349, 16 சிவன் புது வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**
**077 508 2779**

**குடும்பத்தினர்**

(cs 40165) (2.6)

# மரண அறிவித்தல்

அன்னை மடியில் 10 . 06 . 1956



ஆண்டவன் அடியில் 13 . 08 . 2022

## திருமதி தம்பிராசா ஜெகதீஸ்வரி

பலாலியை பிறப்பிடமாகவும் நீர்வேலி வடக்கு. நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பிராசா ஜெகதீஸ்வரி அவர்கள் கடந்த (2022.08.13) சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - பாக்கியம் தம்பதியரின் அன்புப் புதல்வியும். ஆறுமுகம் இராசம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும். தம்பிராசா அவர்களின் அன்பு மனைவியும். ஜெயரூபன் (அவுஸ்ரேலியா). ஜெயதீபன் (பிரான்ஸ்). ஜெயதீபா (இலண்டன்). ஆகியோரின் பாசமிகு தாயாரும். காலஞ்சென்ற கந்தசாமி (சங்கானை). சரஸ்வதி (நீர்வேலி). தேவராசா (மந்துவில்). செல்வராசா (பிரான்ஸ்). இராசதுரை (டென்மார்க்). பரமேஸ்வரி (நீர்வேலி). அருச்சுனன் (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரியும். கார்த்திகா (அபிவிருத்தி உத்தியோகத்தர்). கிறிஸ்தீபா (பருத்தித்துறை). சுகுமார் (இலண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும். ஜெசான் (இலண்டன்). பவுசிகா (இலண்டன்). ஆகியோரின் அன்பு அம்மம்மாவும். அன்னபாக்கியம் (வவுனியா). யோகேஸ்வரி (பிரான்ஸ்). சோதிலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (2022.08.28) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி வடக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர்கள். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**நீர்வேலி வடக்கு,**
**நீர்வேலி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 393 6016**

(cs.46159) (2.6)

# மரண அறிவித்தல்

பிறப்பு 17 . 11 . 1939



இறப்பு 25 . 08 . 2022

## தம்பிஜயா நடேசபிள்ளை

எழுதுமட்டுவாழ் தெற்கு விழுபளையைப் பிறப்பிடமாகவும் தட்டாங்குள வீதி. மீசாலை வடக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஜயா நடேசபிள்ளை நேற்றுமுன்தினம் (25.08.2022) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஜயா - பொன்னம்மா தம்பதியரின் மகனும். இராமலிங்கம் - சின்னம்மா தம்பதியரின் மருமகனும். சரஸ்வதி அம்மாளின் அன்புக் கணவரும். யசோதா. யஜீந்தன் (ஆசிரியர். யா/ மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை). யசிதரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும். இரத்தினசிங்கம். சிவகொங்கா. டனோஜா ஆகியோரின் அன்பு மாமனாரும். லக்ஷணன். காலஞ்சென்ற லஜிந்தன். லஜிந்திரன். லலிதன். காலஞ்சென்ற லகிர்தா. சஸ்வின். மேகவி ஆகியோரின் அன்புப் பேரனும். காலஞ்சென்றவர்களான தங்கரத்தினம். செல்லம்மா. மாரியாம்மா. சிவபாக்கியம் மற்றும் தங்கராசா. கதிர்வேற்பிள்ளை. காலஞ்சென்ற சுப்பிரமணியம். சிவராமலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும். அருந்ததிச்செல்வம். சிவசுந்தரலிங்கம். திலகராணி. காலஞ்சென்ற பரலோகநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.08.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக எழுதுமட்டுவாழ் தெற்கு இராமயன் இந்து மயானத்திதற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**குடும்பத்தினர்**
**077 736 7278**

(cr.8687) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முக்கிய அறிவித்தல்

### அடகுநகை விற்பனை அறிவித்தல்

### ராஜ் ஜுவல்லர்ஸ் திருநெல்வேலி

11.01.2021 ஆம் திகதி தொடக்கம் 31.08.2021 வரை அடகுவைத்த நகைகளை 05.10.2022 க்கிடையில் மீட்டுக்கொள்ளவும். அல்லது முழு வட்டியையும் செலுத்தி புதுப்பித்துக்கொள்ளவும். தவறின் 05.10.2022 ஆந் திகதி விற்பனை செய்யப்பட்டுவிடும். அதன் பின் எக்காரணம் கொண்டும் மீட்க முடியாது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**இல.31C ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி**
(சந்தைக்கு அருகில்)

**021 221 7287, 076 636 1238**

(cs.46153) (2.6)

---

Sri Lanka German Training Institute (SLGTI) – Kilinochchi
(State Ministry of Education)

SLGTI

### விலைமனுக்கோரல் அறிவிப்பு – நீடிப்பு

**R-O Plant maintenance Service & A/C maintenance Service**

**R-O Plant maintenance Service & A/C maintenance Service**

தொடர்பாக 23.07.2022 திகதியிடப்பட்ட நாளிதழ் விளம்பரத்தில் வெளியிடப்பட்ட விலைமனுக்கோரல் இறுதித்திகதி பின்வருமாறு திருத்தப் பட்டுள்ளது.

| | |
|---|---|
| விலைமனுக்கோரல் விநியோகிக்கும் இறுதி நாள் | - 07.09.2022 (09 am- to 03 pm) |
| விலைமனுக்கோரல் முடிவுறும் நாள் | - 08.09.2022 (03 pm) |
| விலைமனுக்கோரல் திறக்கும் நாள் | - 08.09.2022 (03 pm) |

(cr.37923) (2.6)

Director/ Principal
Sri Lanka German Training Institute (SLGTI)
Ariviyalnagr, Kilinochchi

---

## சேவைநலன் பாராட்டு

Congratulations



### திருமதி புஸ்பலதா சந்திரராஜன்

பிரதி அதிபர்
யா/ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலை

(CS 20471)1-6

மேன்மைதங்கிய ஆசிரியை அவர்கள் தனது ஆசிரியத்துவ சேவையினை 1990.03.28ம் திகதி அன்று யா / சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலையில் ஆரம்பித்து தொடர்ச்சியாக 20 வருடங்களாகச் சேவையாற்றி பின் 2010.02.15ம் திகதி முதல் 2022.08.26ம் திகதியாகிய இன்று ஈறாக யா / ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலையில் தொடர்ச்சியாக 12 வருடங்கள் இடையறா சேவையினை ஈந்து ஓய்வுபெறுகின்றார்.

"கண்ணுடையர் என்போர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையோர் கல்லாதவர்"

என்ற வள்ளுவர் வாக்கிற்கு இயைப மாணவச்செல்வங்களை கண்ணுடையோராக்கும் சேவையினை 32 வருடங்களாக தவமாய் மேற்கொண்டுவரும் எமது மூத்த ஆசிரியை அவர்கள் வயது முதிர்வினால் ஓய்வுபெறும் நிலைவந்தே தேகியதே அன்றி மனமுதிர்வின்றி பன்நெடுங்காலம் பல்கிப்பெருகும் கண்ணுடைய மாணவர்களது நன்றிகளோடு வாழ இருகரம்கூப்பி வாழ்த்துகின்றோம்.

நன்றி
பாடசாலைச் சமூகம்.
யா/ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலை

---

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

After A/L's

PLATINUM PARTNER No.1 BTEC Centre in Sri Lanka



BTEC HND

# Civil Engineering

WITH STRUCTURAL DESIGN
Leading to BEng (Hons)

REGISTER BEFORE
SEPTEMBER 10th
to get
EARLY BIRD DISCOUNT 20%

○ பதிவுகளை மேற்கொள்ள வருகை தரும் போது செய்தித்தாளில் உள்ள இப்பிரதியை கொண்டு வரவும்.

23 வருடகால தொழிற்துறை சார்ந்த உயர்கல்வி துறையில் நம்பகமும், சிறப்புமிக்கதுமான BCAS Campus உடன் இணைந்து UGC அங்கீகாரம் கொண்ட UK பட்டப்படிப்புகளை தொடருங்கள்...

- உயர்கல்வியை UK, CANADA, FRANCE, AUSTRALIA, NEW ZEALAND நாடுகளில் தொடரும் சந்தர்ப்பம்
- நவீன கற்கை வசதிகளுடன் கூடிய பிரத்தியேக Civil Engineering கற்கை நிலையத்தில் வழங்கப்படும் பாடநெறி
- பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும் அனுபவமிக்க Civil Engineering நிபுணர்களையும் கொண்ட முழுநேர விரிவுரையாளர்கள்
- அங்கீகரிக்கப்பட்ட Laboratory களில் Material, Hydraulic, Soil நடைமுறைப்பயிற்சிகள்.

Pearson University of East London


077 068 8828 INTAKE NOW ON

BCAS Jaffna Campus,
#. 16, Point Pedro Road, Jaffna.

23 YEARS OF TRUST & EXCELLENCE IN HIGHER EDUCATION

021 221 9910 info@bcas.lk www.bcas.lk BCAS Ranked "Platinum Partner" No.1 once again

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லண்டன் இரட்ணம் பவுண்டேசன் மற்றும் செல்வநாயகி மகாலிங்கம் குடும்பத்தின் நிதிப்பங்களிப்பில் யாழ்.கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் திறன் வகுப்பறை ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. (ய)



# புனிதர்கள் போர்; கால்பந்தாட்டம் சென். பற்றிக்ஸ் அணி சம்பியன்!

## சென். ஹென்றிஸ்லும் அபார ஆட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 27

கொழும்பு சென். பீற்றர்ஸ் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, அழைக்கப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட கால்பந்தாட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரியை எதிர்த்து சென். ஹென்றிஸ் கல்லூரி அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் கோல் எதையும் பதிவுசெய்யவில்லை. சமநிலைத் தவிர்ப்பு உதைகளிலும் இரு அணிகளும் 7:7 என்று சமநிலையில் இருந்தமையால், நாணயச் சுழற்சி மூலம் சென். பற்றிக்ஸ் சம்பியனானது. (ம)



கியூமெடிக்கா நிறுவனத்தால் தெரிவுசெய்யப்பட்ட 100 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொருள்கள் அண்மையில் வழங்கப்பட்டன. மாவட்ட செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் இந்தப் பொருள்களை வழங்கினார். (ய-27)



சி.டி.எல்.ஜி. திட்டத்தினூடாக நல்லூர்ப் பிரதேச சபைக்குட்பட்ட வீட்டுத்தோட்டத்தில் ஆர்வமுள்ள பயனாளிகளுக்கு ஊக்குவிப்பு தொகையாக ரூ.8 லட்சத்துக்கான காசோலை உள்ளூராட்சித் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டது. (ய-20)



கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் பொருளாதாரத்தில் நலிவுற்ற தெரிவுசெய்யப்பட்ட 20 மாணவர்களுக்கு மக்கள் வங்கி வன்னிப் பிராந்திய முகாமையாளர் மற்றும் அவர்களது குழுவினரால் உலர் உணவுப் பொருள்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (ய-159)

# ஊடகவியலாளர்களுக்கு இடர்முகாமை செயலமர்வு



வவுனியா, ஓக. 27

வவுனியாவில் ஊடகவியலாளர்களுக்கான இடர் முகாமைத்துவ செயமலர்வு நேற்றுமுன்தினம் வவுனியா இரண்டாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதி மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் வவுனியா மாவட்ட உதவி மாவட்டச் செயலர், இடர் முகாமைத்துவ உதவியாளர், நீர்ப்பாசன அதிகாரிகள், இடர் முகாமைத்துவ அதிகாரிகள், வளிமண்டல திணைக்களத்தின் பணிப்பாளர், ஊடகவியலாளர்கள் மற்றும் வளவாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-110)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சி ஒன்று நிறைவேறும். தாய்வழி உறவினர் உதவி செய்வர். வரவு அதிகரிக்கும். மனம் விரும்பும் வகையில் செயற்படுவீர்கள். புதிய முயற்சி ஆதாயம் தரும். நிதிநிலை உயரும்.

**இடபம்:** நீண்டநாள் எண்ணம் நிறைவேறும். குடும்பத்தினருடன் அமர்ந்து எதிர்காலம் பற்றி யோசிப்பீர்கள். குடும்பத்தினர் நலனில் அக்கறை செலுத்துவீர்கள்.

**மிதுனம்:** செயல்களில் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தினின் தேவைக்காக செலவு செய்வீர்கள். புதிய சொத்து வாங்கும் முயற்சி நிறைவேறும். செயல்களில் கவனம் தேவை.

**கடகம்:** நினைத்ததை நிறைவேற்றி மகிழ்வீர்கள். எதிர்காலம் பற்றிய சிந்தனை அதிகரிக்கும். மனதில் வீண் சிந்தனை உண்டாகும். தந்தை வழி உறவினரால் உங்கள் முயற்சி நிறைவேறும்.

**சிம்மம்:** வீண் செலவு அதிகரிக்கும். குடும்பத்தினர் உங்கள் நிலையைப் புரிந்துகொள்ளாமல் செயற்படுவர். குடும்பத்தினர் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய நவீன பொருள் வாங்குவீர்கள்.

**கன்னி:** எதிர்பார்ப்பு நடந்தேறும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். புதிய முயற்சி கை கொடுக்கும். எதிர்பார்த்த வருமானம் வந்து சேரும். நெருக்கடி மறையும். இனிய சம்பவத்தால் மகிழ்வீர்கள்.

**துலாம்:** நண்பர்கள் உதவியுடன் முயற்சி ஒன்றில் ஈடுபடுவீர்கள். கவனமுடன் செயற்படவேண்டிய நாள். உங்கள் முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். எதிர்பாலினரின் உதவியால் நன்மை காண்பீர்கள்.

**விருச்சிகம்:** அறிவாற்றல் வெளிப்படும். எதிர்பார்த்த வருமானம் வந்து சேரும். நன்மையான நாள். தந்தை வழி உறவுகளால் எண்ணம் நிறைவேறும். பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து சிந்திப்பீர்கள்.

**தனுசு:** நினைப்பதற்கு மாறாக சில செயல்கள் இன்று நடைபெறும். எதிரிகளின் கை மேலோங்கும். சிந்தித்து செயற்பட வேண்டிய நாள். எதிர்பார்த்த உதவி கிடைக்க தாமதமாகும். முயற்சி இழுபறியாகும்.

**மகரம்:** புதிய சிந்தனை உருவாகும். நண்பர் ஆதரவால் நன்மை அடைவீர்கள். எதிர்பார்ப்பு நிறைவேறும். குழப்பம் விலகும். எதிரியை அடையாளம் காண்பீர்கள்.

**கும்பம்:** செயல்களில் வெற்றி காண்பீர்கள். உடல் நிலையில் இருந்த சங்கடம் விலகி சுறுசுறுப்படைவீர்கள். வாழ்க்கைத் துணையின் வழியே எதிர்பார்ப்பு நிறைவேறும். எதிரிகளின் செயல்களை முறியடிப்பீர்கள்.

**மீனம்:** அவசர வேலைகளால் சங்கடத்துக்கு ஆளாவீர்கள். சிலர் வெளியூர் பயணம் மேற்கொள்வர். அதிகாரியின் கண்டிப்புக்கு ஆளாவீர்கள். வேலைப்பளுவால் உடலும் மனமும் சோர்வடையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரிய மின்னுற்பத்திதான் நெருக்கடிகளுக்குத் தீர்வு!

சூரியமின்சக்தி கைத்தொழிற்துறை அமைப்பின் செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 27

**நாட்டின் மின்வலுத்துறையில் காணப்படும் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு விரைவான தீர்வாக, சூரியசக்தி மின்னுற்பத்தியை மேம்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால் அடுத்த வருடம் மின் கட்டணத்தைப் பலமடங்கு செலுத்தவேண்டி ஏற்படும் என்று சூரிய மின் சக்தி கைத்தொழிற்துறை அமைப்பின் செயலாளர் லக்மால் பெர்னாண்டோ தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மின்னுற்பத்தி மற்றும் மின்பாவனைக்கான கேள்வி எழுந்துள்ள பின்னணியில் இலங்கை மின்சாரசபை 239 சதவீதத்தினால் மின்கட்டணத்தை அதிகரிப்பதற்கு கோரியபோதும் 75 சதவீதத்தினால் மின்கட்டணத்தை அதிகரிக்க இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு அனுமதி வழங்கியது. இவ்வாண்டில் மாத்திரம் இலங்கை மின்சார சபை 500 பில்லியன் ரூபா நட்டத்தை எதிர்கொண்டுள்ளது.

எரிபொருள் மற்றும் நிலக்கரி ஆகியவற்றின் விலையேற்றம், ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி ஆகியவற்றால் எதிர்வரும் காலங்களில் மின்சாரசபை பெரும் நிதி நெருக்கடியினை எதிர்கொள்ள நேரிடும். மின்சாரத் துறையில் நிலவும் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணாவிடின் எதிர்வரும் ஆண்டும் மின்கட்டணத்தை அதிகரிக்க நேரிடும்.

இலங்கையானது புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்கள் ஊடாக மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடிய நாடாகக் காணப்படினும் புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்களின் பங்களிப்பு 35 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது. எரிபொருள் மற்றும் அனல் மின் நிலையங்கள் ஊடாகவே 65 சதவீத அளவில் மின்னுற்பத்தி செய்யப்படுகிறது.

மின்னுற்பத்திக்கான கேள்வி மற்றும் பயன்பாடு பன்மடங்கு அதிகரித்துள்ள நிலையில் மின்சாரசபை தவறுகளை திருத்திக் கொண்டு முறையான திட்டத்தை செயற்படுத்தாவிடின் எதிர்வரும் காலங்களில் மின்னுற்பத்தி துறையில் பெரும் நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடும்.

2023ஆம் ஆண்டு நிலக்கரி இறக்குமதிக்கு மாத்திரம் 400 மில்லியன் டொலர் தேவைப்படும் - என்றுள்ளது. (ம)

# தானிஷ் அலி உள்ளிட்ட ஏழு பேருக்குப் பிணை!

கொழும்பு, ஓக. 27

ஜனாதிபதி மாளிகைக்குள் அத்துமீறி பிரவேசித்த குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த தானிஷ் அலி உள்ளிட்ட ஏழு சந்தேக நபர்களை பிணையில் விடுவிக்க கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு கோட்டை நீதிவான் திலின கமகே இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (ம)

## காணவில்லை

திருமதி தர்மகுலசிங்கம் இந்திராணி 19555971915 எனும் இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையும் வேறு சில ஆவணங்களும் ஒருதொகைப் பணமும் சிறிய கைப்பையுடன் 25.08.2022 அன்று யாழ்.பஸ்நிலையத்தில் தொலைந்து விட்டது. இதைக் கண்டு எடுப்பவர்கள் தயவுசெய்து கீழ்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

021 221 1120

## வீடு வாடகைக்கு விடப்படும்

239/1 பிறவுண் றோட் யாழ்ப்பாணம்
4 அறைகள் 2 விசாலமான கோல் குளியல் அறை
வாகன தரிப்பிட வசதிகளுடன்
வீடு வாடகைக்கு உண்டு.
( வைத்தியர்கள், பொறியியலாளர்கள், வங்கி ஊழியர்கள் விரும்பத்தக்கது.)

076 661 8169

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
ஐயம்பிள்ளை பரமேஸ்வரர்
(ஓய்வுபெற்ற உப பொலிஸ் பரிசோதகர்)



தோற்றம் 13.03.1949
மறைவு 07.09.2021

ஆண்டுகள் எத்தனை சென்றாலும்
மறவாது உங்கள் நினைவுகள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாவகச்சேரி
குடும்பத்தினர்
074 213 7456
(cs.20479) (2.6)

## 23ஆவது ஆண்டு நினைவலைகள்

மலர்வில் 07 01 1977



துஞ்சத்தில் 10 09 1999

அமரர் குணசிங்கம் ஞானேந்திரன்
(குட்டி கண்ணா, கோபிகா ஆடையக உரிமையாளர்)

ஆண்டுகள் இருபத்து மூன்று ஆனதடா
ஆருயிர் கண்ணா! எம் கண்ணிலிருந்து உன்
முகம் இன்னமும் மறையவில்லையடா
ஒவ்வொரு ஆண்டும் நல்லூரான் சன்னிதானத்தில்
உன் முகத்தை காண்கின்றோமடா.
நீ எங்கள் கண்முன்னே என்று வருவாய்யென
ஏங்கி உன் நினைவில் வாழ்கின்றோம்.

40/6, புகையிரத கிழக்கு
ஒழுங்கை, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்
(CS.461641)1-6

# குடும்பத்தலைவர் விபத்தில் இறப்பு

கிளிநொச்சி, ஓக. 27

மோட்டார் சைக்கிள்- கப்ரக வாகன விபத்தில் இளம் குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச்சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு 9.30 மணிக்கு கிளிநொச்சியில் இடம்பெற்றது.

கிளிநொச்சியிலிருந்து பரந்தன் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் பரந்தனிலிருந்து முறிகண்டி நோக்கிப் பயணித்த கப்ரக வாகனமும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது. விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த துரைராசா டிலக்சன் (வயது-30) என்ற இளம் குடும்பத்தலைவரே உயிரிழந்தவராவார். உயிரிழந்தவரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக கிளிநொச்சி மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. விபத்து தொடர்பில் கப்ரக வாகன சாரதியைக் கைதுசெய்த கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (ம-14-113)

## தேவை

வாடகைக்கு வாகனங்கள்
தேவை

077 772 2215 (cs.20489) (2.7)

## வேலையாட்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல வர்த்தக நிறுவனத்திற்கு
பின்வரும் வேலையாட்கள் உடன் தேவை.
● களஞ்சிய காப்பாளர் ● சிட்டை எழுதுனர்
அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
உடன் தொடர்புகொள்ளவும்

076 009 4946

## வாடகைக்குண்டு

இருபாலை வீதி, கோண்டாவிலில்
6 அறைகளுடன் சகல வசதிகளுடன் கூடிய
வீடு வாடகைக்குண்டு.
(cs.461611)(2.6)

071 601 3379 / 077 017 2357

## காணி விற்பனைக்கு

தாவடி மானிப்பாய் வீதி தாவடி
வடக்கில் இரண்டு பரப்புக் காணி
விற்பனைக்குண்டு
(பிரதான வீதியிலிருந்து 70 m வடக்கே)

077 255 0807

## காணி விற்பனைக்கு உண்டு

2 பரப்பு காணி
கோப்பாய் கிருஷ்ணன்
கோவிலுக்கு
அருகாமையில்
விற்பனைக்கு உண்டு.

077 982 6997



# வள்ளுவர்புரம் பகுதியில் வீட்டின் மீது தாக்குதல்!

முல்லைத்தீவு, ஓக. 27

முல்லைத்தீவு, ரெட்பானா, வள்ளுவர்புரம் பகுதியில் நேற்றுமுன்தினம் வீடொன்றின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. வாள்களுடன் வந்த கும்பல் ஒன்றே தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த வன்முறைக்குழுவால், வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த உழவியந்திரமும் தாக்கிச் சேதப்படுத்தப்பட்டதுடன், வீட்டில் இருந்த பொருள்களும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன என்று புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரலிசை நாத வந்தனம் நிகழ்ச்சி! இந்துக் கல்லூரி சபாலிங்கம் அரங்கில்

யாழ்ப்பாணம், ஓக. 27

திருமதி விதுஷா கோபிகிருஷ்ணா நெறியாள்கையில், சாகித்திய வீணாலயா மாணவர்களின் விரலிசை நாதவந்தனம் எனும் வீணை வாத்திய இசை நிகழ்ச்சி யாழ். இந்துக் கல்லூரி சபாலிங்கம் அரங்கில் நடைபெறவுள்ளது.

நாளை 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு, யாழ். இந்துக் கல்லூரி சபாலிங்கம் அரங்கில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளதாக விழாக்குழுவினர் அறியத்தந்துள்ளனர்.

கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி ஓய்வுநிலை முதலாவது பீடாதிபதி முனைவர் திருநாவுக்கரசு கமலநாதன் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிக்கும் இந்த நிகழ்வில், துறைசார் அதிதியாக, யாழ். பல்கலைக்கழக இசைத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஜனனி நடேசமூர்த்தி கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சாகித்திய வீணாலயா மாணவர்கள் சுமார் 70 பேர், 6 வெவ்வேறு அரங்குகளாக வீணை இசை விருந்தை இந்த நிகழ்வில் வழங்கவிருப்பதாக திருமதி விதுஷா கோபிகிருஷ்ணா தெரிவித்தார். (ஒ-இ)



மறுமலர்ச்சி மன்றத்தின் தயாரிப்பில் கனிஸ்ரனின் நெறியாள்கையில் உருவான 'புத்தகப்பை' சிறுவர் நாடகம் அல்வாய் அருள்மிகு வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் தேவஸ்தானத்தில் அண்மையில் அரங்கேற்றப்பட்டது. (ம)

## இலங்கையின்...

முன்னதாக இந்தியா, சீனா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளை மையப்படுத்தி கடன் வழங்குநர்களின் மாநாட்டை நடத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜப்பானை கேட்டிருந்தார். இதற்கமையவே ஜப்பான் குறித்த மாநாட்டை கூட்ட விருப்பம் கொண்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இலங்கைக்கு கடன் வழங்கிய மிகப் பெரிய நாடான சீனா இந்த மாநாட்டில் கலந்து கொள்ளுமா என்பது தொடர்பில் தகவல் எதுவும் வெளியாகவில்லை.

முன்னதாக சீனாவுடனான கடன்மறுசீரமைப்புக்கு அந்த நாடு தனது நிலைப்பாட்டை மாற்றவேண்டும் என ஜனாதிபதி ரணில் கோரியிருந்தார். இவ்வாறான தொரு சூழலில், ஜப்பானுக்குப் பயணம் மேற்கொள்ளும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்த மாநாட்டில் கலந்து கொள்வார் என்று தெரிகின்றது.

இலங்கை அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சின்போது ஜப்பான் அரசாங்கம், இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டை ஒழுங்கமைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5)

## சர்வதேச...

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 'சூம்' தொழில்நுட்பத்தின் ஊடாகக் கலந்துரையாடலில் இணைந்துகொண்டதுடன், இரு தரப்பிலும் சாதகமான கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

மின் கட்டணத் திருத்தம் மற்றும் மதுவரிச் சட்டம் உள்ளிட்ட திறைசேரி தொடர்பான நேற்றைய கலந்துரையாடலில், தேவையான மேலதிக தகவல்களை வழங்குமாறு சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் முன்வைத்த கோரிக்கைக்கு இணங்க, நாளைமறுதினம் திங்கட்கிழமைக்குள் தகவல்களை வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிதி ஆலோசகர்கள், சட்ட ஆலோசகர்கள் நேற்றைய பேச்சில் கலந்துகொண்டதுடன், எதிர்வரும் புதன்கிழமை மூன்றாம் சுற்றுப் பேச்சு நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. (அ-ஒ-22)

## ஒரு கோடி...

மீனவர்கள் அதை அணைக்க முற்பட்டனர். இருப்பினும் அந்த முயற்சி வெற்றியளிக்காத நிலையில் அவை முழுமையாகத் தீயில் எரிந்துள்ளன.

செல்வா, மரியசீலன், ராசன் ஆகிய சிறு தொழிலாளர்களின் சுமார் ஒரு கோடி ரூபாவுக்கு அதிக பெறுமதியுடைய வலைகளும் மீன்பிடி உபகரணங்களுமே இவ்வாறு எரிந்துள்ளன. தீப்பற்றலுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. (அ-ஒ-27)

## மோ.சைக்கிளிலிருந்து...

பொன்னாலை பாலத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

காரைநகர் - விக்காவில் பகுதியைச் சேர்ந்த ஜெயந்தன் வேதப்பிரியா (வயது -23) என்ற 4 மாத கர்ப்பிணிப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண் தனது கணவருடன் மூளாய் கூட்டுறவு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார்.

காரைநகர் - பொன்னாலை பாலத்தடியில் மோட்டார் சைக்கள் பயணித்த பொழுது பாலத்தின் கரையோரமாக பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டிருந்த தடுப்புக்கல்லில் பெண்ணின் கால் திடீரெனப் பட்டதால் அவர் நிலைதடுமாறி கீழே விழுந்துள்ளார். இதன்போது அவரின் கால் துண்டானதோடு தலை மற்றும் இடுப்பு பகுதியும் திரும்பிய நிலையில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

'அதிவேகம் மற்றும் வாகன கட்டுப்பாடு இன்மையே விபத்துக்கான காரணம்' என்று ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார். (அ-ஒ-125)

## கோத்தாவை...

வருகின்றார். ஆனால், இதன் விபரீதத்தை அவர் விரைவில் எதிர்கொள்வார் - இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசுக்கு எதிரான போராட்டச் செயற்பாட்டாளர்களை அடக்கும் நடவடிக்கைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உடனடியாக நிறுத்த வேண்டும். இல்லையேல் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு நடந்த அவமானத்தைப் போல் இந்நாள் ஜனாதிபதியும் சந்திக்க வேண்டிவரும்.

69 இலட்சம் மக்கள் தனக்கு வாக்களித்தார்கள் என்று மார்தட்டி வீர வசனம் பேசிய கோத்தாபய இறுதியில் இலங்கையைவிட்டு விரட்டியடிக்கப்பட்டார். இன்று எந்த நாடும் அடைக்கலம் கொடுக்காத நிலையில் அவர் மீண்டும் இலங்கைக்கு வர எத்தனிக்கின்றார் - என்றார். (அ-ஒ-22)

## தனியார்...

அதிகார சபைக்குச் சொந்தமான வீதியை இராணுவத்தினர் ஆக்கிரமித்து வைத்துள்ளமையால் தனியார் காணி உரிமையாளர்களின் சம்மதமின்றி அவர்களின் காணி ஊடே அமைக்கப்பட்ட வீதியையே இராணுவத் தளபதி திறந்து வைத்துள்ளார். (அ-ஒ-5)

## இலங்கையின் இறைமை...

சீனத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையின் ஊடாக அவர் இதனைத் தெரியப்படுத்தியுள்ளார்.

'இலங்கையின் இறையாண்மை, சுயாதீனம் மற்றும் ஒருமைப்பாட்டு மீறப்படுவதை சீனா எந்தச் சந்தர்ப்பத்திலும் சகித்துக்கொள்ளாது. நாங்கள் இலங்கைக்கு ஒத்துழைப்பை வழங்குவோம். ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவையின் 51 ஆவது கூட்டத் தொடர் அடுத்த வாரம் ஜெனிவாவில் நடைபெறவுள்ளது. இதன் போது இலங்கையின் மனித உரிமை சம்பந்தமாக பேசப்படும். இலங்கை மக்கள் ஏற்கனவே கடும் பொருளாதார மற்றும் மனிதாபிமான கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்தநிலையில், எப்போதும் மனித உரிமை சம்பந்தமாக உபதேசம் செய்யும் நாடுகள் உண்மையில் என்ன செய்யப் போகின்றன என்பது தெரியாதுள்ளது' - எனவும் சீனத் தூதுவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ஒ-இ)

## 'வாய்ப்பூட்டுடன்...

அடுத்து, சிறையிலிருந்து நேற்று வெளியேறினார்.

பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்ட ரஞ்சன் ராமநாயக்க, தனக்கு வழங்கப்பட்ட மன்னிப்பின் நிபந்தனைகளுக்கு அமைய சில விடயங்கள் தொடர்பில் பேசுவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இதேவேளை - எதிர்வரும் காலத்தில், நீதித்துறையை விமர்சிக்கும் வகையில் எந்தவொரு கருத்தையும் தெரிவிக்கவோ செயற்படவோ கூடாது என்ற நிபந்தனையுடன் ரஞ்சனுக்கு பொது மன்னிப்பு வழங்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்திருந்தார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டிருந்தது.

விடுதலையான பின்னர் முதன்முறையாக செய்தியாளர்களிடம் பேசிய ரஞ்சன், மன்னிப்பு நிபந்தனைகளை மீறினால், இடைநிறுத்தப்பட்ட சிறைத்தண்டனை மீண்டும் நடைமுறைக்கு வரும். அதாவது மேலும் ஐந்து ஆண்டுகள் தண்டனை அனுபவிக்க வேண்டும் . நான் முன்பு போல் பேச விரும்புகிறேன், ஆனால் என்னால் முடியாது,எனது விடுதலைக்காகவும், அதற்காகச் செயற்பட்டவர்களுக்கும் நன்றி.

எனக்கு ஒரு பாயும், பின்னர் தரையில் தூங்க வேண்டிய கட்டாயத்தில் ஒரு மெத்தையும் வழங்க எதிர்க்கட்சித் தலைவர் தான் நடவடிக்கை எடுத்தார். உயர் கல்வியைத் தொடர என்னை அங்குனுகொலபெலஸ்ஸவிலிருந்து கொழும்புக்கு மாற்றுவதற்கும் அவர் உழைத்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் வழிகாட்டலுடன் ஜெனிவாவுக்கு எனது வழக்கை எடுத்துச் சென்ற அமைச்சர்களான ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோருக்கும் நன்றி .

நான் எவருக்கும் பயந்து அடிமையாக இருக்கமாட்டேன். மக்களிடமிருந்து என்னை எவரும் பிரித்தெடுக்கவே முடியாது. நான் எப்போதும் மக்கள் பக்கமே நிற்பேன். நான் மீண்டும் அரசியலில் ஈடுபடுவேன். தேர்தலில் போட்டியிட்டு மீண்டும் மக்களுக்குச் சேவையாற்ற விரும்புகின்றேன். இந்த நாட்டின் அப்பாவி மக்களை வதைத்து நாட்டைக் கொள்ளையடித்தவர்களுக்கு எதிராக எனது நடவடிக்கைகள் தொடரும். நான் கட்சி தாவப்போவதாக வெளிவரும் செய்திகள் தவறானவை' என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ-ஒ-22)

## ரஞ்சனுக்கு...

ரஞ்சனுக்கு அந்த வாய்ப்பு வழங்கப்படும் - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் ரஞ்சன் ராமநாயக்கவுடன் நேற்று மாலை இணைந்து நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

'ரஞ்சன் ராமநாயக்கவுக்கு முழுமையான விடுதலை கிடைக்கவில்லை. எனவே, அவர் சுதந்திரமாக அரசியலில் ஈடுபடும் வகையில், முழுமையான சுதந்திரத்தை வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுக்கின்றேன்' என்றும் அவர் குறிப்பிட்டார். (அ-ஒ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 186 பரப்புக் காணி (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.

- இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
- பருத்தித்துறை வீதியில் இருந்து 1 1/2 KM தூரத்தில்
- சோமஸ்கந்தா கல்லூரியில் இருந்து 1 1/2 KM தூரம்
- புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காப்பெற் வீதியில் இருந்து இரண்டாவது காணி .
- 775 இலக்க வழி பேரூந்துகள் அதிகம் செல்லும் வீதி.
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம். விவசாயம் செய்வதற்கும், வீடுகள் அமைப்பதற்கும் உகந்த இடம்.
- ஒரு பரப்பின் (1 நிலபரப்பு) விலை இரண்டு இலட்சம் (200,000) மட்டும்.

தொடர்பு: **077 6585 999**
**076 4385 814**
**077 8748 135**

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 60 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.

- நான்கு பரப்பாகவும், இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம் காரைநகர் செல்லும் பிரதான வீதி (காப்பெற் வீதி) முகப்புடன்.
- 784 இலக்க பாதை போக்கு வரத்து பேரூந்துகள் அதிகம் செல்லும் வீதி.
- பொன்னாலை ரவுண்டப் போட் சந்தியிலிருந்து 1 KM தூரத்தில்
- வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி (Jaffna College) இருந்து 1 KM தூரத்தில்.
- ஒரு பரப்பின் (நிலபரப்பு) விலை இரண்டு இலட்சம் **200,000/=** மட்டும்.

தொடர்பு:
**077 911 6983**
**077 148 8348**

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 15 பரப்பு (நிலபரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.

- இரண்டு பரப்பாக பிரிக்கப் பட்ட நிலையில்.
- கைதடி சந்தியிலிருந்து 750 M தூத்தில்
- A09 வீதியில் இருந்து இரண்டாவது காணி.
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்.
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி.

தொடர்பு:
**076 7558 606**
**077 259 0391**

(CS 20462) (1/6)


# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து ஊர்காவற்றுறை செல்லும் பிரதான வீதியில் பிரசித்திபெற்ற மண்கும்பான் வீரகத்தி பிள்ளையார் கோயில் அருகாமையில் 50 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு

- சாட்டி கடற்கரைக்கு செல்லும் பிரதான வீதியில் அமைந்துள்ளது.
- யாழ். நகரிலிருந்து **8 KM** தூரத்தில் உள்ளது.
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும், 4 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்.
- வீடுகள் அமைப்பதற்கும், களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும், திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம்.

பார்வையிடும் நேரம் :
காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை
**தரகர் தேவையில்லை.**




## தொடர்பு:- ஜெயம்

**077 8147 389**
**077 2417 589**

(CS 20459) (1/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.08.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.